DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

CC.NO. 65/2024

Deposition of Lw10 examined as PW7 Date: 04.11.2025

| | |
|---|---|
| Name | டாக்டர். தினேஷ்குமார் |
| Father's/Husband's Name | குணசேகரன் |
| Village | சிதம்பரம் |
| Taluk | |
| Age | 38/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 04.11.25

(Accused absent. Petition u/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.07.2021 ம் தேதி இரவு சுமார் 08.40 மணி அளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது என்னிடம் 42 வயது மதிக்கத்தக்க சிவக்குமார், த/பெ, சின்னப்பன் என்பவரை விஜயகுமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை விசாரித்தபோது தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் வலது காதை கடித்ததாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவரின் வலது காது அறுபட்ட நிலையில் காணப்பட்டது. மேலும் நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பிளாஸ்டிக் சர்ஜரி சர்ஜனுக்கு பரிந்துரை செய்தேன். மேற்படி நபர் மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு 02.07.2022 ம் தேதி அன்று சென்றுள்ளார். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணவேல் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். மேற்சொன்னவாறு தாக்கியிருந்தால், மேற்கண்டவாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் சிகிச்சைக்கு வந்த இரண்டு நபர்களின் விபத்து பதிவேட்டில் ஒரு நபர் 08.40 மணிக்கு வந்ததாகவும், மற்றொரு நபர் 08.45 மணிக்கு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் நான் மேற்படி நேரத்தில் தான் சிகிச்சைக்கு வந்த நபர்கள் வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் போலிசார் என்னிடம் இருந்து கருத்துரை சான்று தனியாக வாங்கினார்களா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் பின்பக்கம் தான் காயக்கருத்துரை எழுதிக்கொடுப்போம். போலிசார் விசாரணையில் சிவக்குமார் விருப்பத்தின் பேரில் மேல் சிகிச்சைகாக தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் தனியார் மருத்துவமனைக்கு சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் பொதுவாக பரிந்துரை செய்யவேண்டும் என்றால் அரசு மருத்துவமனைக்குதான் பரிந்துரை செய்வோம். ஆனால் சிவக்குமார் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டும் என்று விரும்பியதால் அவருடைய

விருப்பத்தின் பேரில் சென்றதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சிவக்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய சான்றின் அடிப்படையில் கொடுங்காயம் என்று நான் காயக்கருத்துரை வழங்கியுள்ளது தவறு என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அழைத்து வந்தவர் யார் என்றால் விஜயகுமார் என்பவர் ஆவார். காயம்பட்ட நபர்கள் 108 ஆம்புலன்சில் வந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. 108 ஆம்புலன்சில் அட்டென்டர் இல்லாமல் வந்திருந்தால் விபத்து பதிவேட்டில் அதுபற்றி எழுதி இருப்பேன். போலிசார் விசாரணையில் நான் 01.07.2021 ம் தேதி சுமார் 08.00 மணி அளவில் பாண்டூர் கடை வீதியில் தன்னை தெரிந்த நபர்கள் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்த நபரை சிகிச்சை அளித்து அதன் முடிவில் காயத்தின் தன்மையானது கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 01.07.2021 ம் தேதியே கார்த்திகேயன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் சிவக்குமார் மற்றும் கார்த்திகேயன் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

4/1/25

நீதித்துறை நடுவர் எண் I,
[illegible]